நீதித்துறை நடுவர் எண். 2, மதுராந்தகம்
முன்னிலை: செல்வி.பா.பவ்யா, B.A., L.L.B.,
2026ம் ஆண்டு ஜீன் திங்கள் 10ம் நாள் புதன்கிழமை

**சி.எம்.பி. எண்.583/2026**

**in**

**CC375/2025**

தேன்மொழி
க/பெ.மனோகரன் ... மனுதாரர்/வழக்கு சொத்தின் உரிமையாளர்

//எதிர்//

தமிழக அரசு சார்பாக,
காவல் ஆய்வாளர்,
படாளம் காவல் நிலையம்,
செங்கல்பட்டு.
நிலையக் குற்ற எண்.160/2025
U/s.296(b), 304(2) of BNS.

... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனுவானது 03.06.2026 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று 10.06.2026 என் முன்விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.முருகேஷ் அவர்கள் ஆஜராகியும் அரசு தரப்பில் அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2. திரு.கணேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்களையும் கேட்டு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு சொந்தமான **OPPO A3X 5G 4/64** IMEI No. **864483079565530** கொண்ட அலைபேசியை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்கக் கோரி இந்த மனு பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 497 மற்றும் 503 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவில் உள்ள பொருண்மைகளின் சுருக்கம்**

மனுதாரர் தான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் அவருக்கு சொந்தமான **OPPO A3X 5G 4/64** IMEI No. **864483079565530** கொண்ட

அலைபேசியை மீது படாளம் காவல் நிலையத்தில் குற்ற எண் 160/2025ல் பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 296(b), 304(2)–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு சொத்தாக சேர்க்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி குறிப்பிடப்பட்ட அலைபேசி தனது தனிப்பட்ட சொத்து என்றும், அதன் சட்டபூர்வமான உரிமையாளர் தான் என்றும், குறிப்பிட்ட அந்த அலைபேசியானது தனது அன்றாட தனிப்பட்ட மற்றும் தொழில்முறை பயன்பாட்டிற்குத் தேவைப்படுகிறது என்றும், மேற்படி அலைபேசியை படாளம் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதால் அது சேதமடையலாம் அல்லது அதன் இயல்பு நிலையில் இருந்து பழுது ஏற்பட்டு அலைபேசி மதிப்பு குறைய கூடும் என்றும், மேற்படி அலைபேசியை இடைக்காலமாக ஒப்படைக்குமாறு தெரிவித்துள்ளார்.

**2.எதிர் மனுதாரரின் ஆட்சேபணை**

வழக்கு சொத்தை மனுதாரர் வசம் ஒப்படைப்பது குறித்து படாளம் உதவி காவல் ஆய்வாளருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதன்படி பதில் அறிவிப்பு பெறப்பட்டது. அந்த பதில் அறிவிப்பில் வழக்கு சொத்தை அதன் உரிமையாளரிடம் நீதிமன்றத்தின் மூலம் ஒப்படைக்க எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்று பதில் அளிக்கப்பட்டுள்ளது.

**3. தீர்ப்பு**

இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

மேற்படி வழக்கு சொத்தான **OPPO A3X 5G 4/64** IMEI No. **864483079565530** கொண்ட அலைபேசி படாளம் காவல் நிலையம் குற்ற எண் 160/2026ல் கைப்பற்றபட்டு CC375/2025 ஆன வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு சொத்து படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு வழக்கு எண் P.I. 149/2025 என்று பதிவு செய்யப்பட்டது. இம்மனுதாரர் இவ்வழக்கு சொத்தின் உரிமையாளர் என்பதற்கு உறுதி கூற்றும், அலைபேசியை வாங்கியதற்கான ரசீது நகல் மற்றும் ஆதார் கார்டு நகல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர் சமர்ப்பித்த ஆவணமான அலைபேசியை வாங்கியதற்கான ரசீது நகலை பரிசீலிக்கையில் வழக்கு சொத்தான **OPPO A3X 5G 4/64** IMEI No. **864483079565530** கொண்ட

அலைபேசியின் உரிமையாளர் தேன்மொழி என்பதும், கண்டறியப்பட்டுள்ளது மேலும், அவரது உறுதி கூற்றில் மேற்படி அலைபேசியை தனது மருமகள் பயன்பாட்டிற்காக தான் தனது பெயரில் வாங்கி கொடுத்ததாகவும் கூறியுள்ளார். மேலும், மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் சுந்தர்பாய் அம்பாலால் தீர்ப்பின் வழிகாட்டுதலின் படியும் தீர்மானித்து முடிவில் மனுதாரரிடம் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் வழக்கு சொத்து மனுதாரரிடம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

**4. நிபந்தனைகள்**

1. மனுதாரர் தானும் தனக்கான தனி நபர் ஒருவரும் ரூபாய் 10,000/– (பத்தாயிரம்)க்கு பிணையப்பத்திரம் எழுதித் தரவேண்டும்.

2. மனுதாரர் வழக்கு சொத்தை புகைப்படம் எடுத்து வழக்கு கோப்பில் இணைக்க உத்தரவிடப்படுகிறது.

3. பஞ்சநாமா தயார் செய்து வழக்கு கோப்பில் இணைக்க உத்தரவிடப்படுகிறது.

4. வழக்கு சொத்தை எந்தவித உருமாற்றமும் செய்யக்கூடாது என்று உத்தரவிடப்படுகிறது.

5. மனுதாரர் வழக்கு சொத்தை விற்கவோ உருமாற்றம் செய்யவோ மாட்டேன் என ஒரு உறுதி கூற்றினை தாக்கல் செய்ய வேண்டும்.

6. மனுதாரர் நீதிமன்றம் உத்தரவிடும் போது வழக்கு சொத்தை ஆஜர் செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜீன் திங்கள் 10–ம் நாள் புதன்கிழமை இத்திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

BAVYA BALU

Judicial Magistrate No. II
Digitally signed by BAVYA BALU
Location: Madurantakam
Date: 2026.06.10 09:50:42 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
மதுராந்தகம்.